**எல்கடுவ பிளாண்டேசன் லிமிடெட் கம்பனி - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எல்கடுவ பிளாண்டேசன் லிமிடெட்டின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள்**

| | ஊாயி நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இற்கான இணக்கமின்மைகள் பின்ருமாறு | | |
| i. | கம்பனியின் உழவு இயந்திரம் மற்றும் ட்ரெய்லர் விற்பனையால் கிடைத்த ரூபா 900,000 பணம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த தவறானது 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தை சரியாக முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்க வேண்டும். |
| ii. | மீளாய்வாண்டின் போது கம்பனிக்கு கிடைத்து மீண்டும் முதலீடு செய்யப்பட்ட ரூபா 4,144,367 தொகையான நிலையான வைப்பு வட்டி காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பணத்தை பதிவேடுகளுடன் மீண்டும் பரிசோதித்து குறித்த திருத்தங்கள் 2022 ஆம் ஆண்டின் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மீண்டும் முதலீடு செய்யப்பட்ட நிலையான வைப்பு வட்டியினை சரியாக நிதி செயற்பாடுகளின் கீழ் காண்பிக்க வேண்டும். |
| iii. | மீளாய்வாண்டின் நுகர்வு உயிரியல் சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த இலாபமான ரூபா 55,174,471 தொகை செயல்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் சீராக்கப்பட்டு இருக்கவில்லை அவ்வாறே அந்த சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த ரூபா 88,982,550 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 33,808,079 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | இதனை சமர்ப்பிக்கும் போது ஏற்பட்ட வழுவானது 2022 ஆம் ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் 2021 ஆம் ஆண்டுக்கு உரியதாக ஒப்பீட்டு ரீதியான தகவல்களை சமர்ப்பிக்கும் போது திருத்தப்பட்டுள்ளது. | நுகர்வு உயிரியல் சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த இலாபம்/நட்டம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் கீழ் சரியாக சீராக்கப்பட வேண்டும். |
| iv. | பெறுமதி வாய்ந்த உயிரியல் சொத்துக்களினை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்திருந்த ரூபா 19,132,425 தொகை காசுப்பாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இதனை சமர்ப்பிக்கும் போது ஏற்பட்ட வழுவானது 2022 ஆம் ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் 2021 ஆம் ஆண்டுக்கு உரியதாக ஒப்பீட்டு ரீதியான தகவல்களை சமர்ப்பிக்கும் போது திருத்தப்பட்டுள்ளது. | பெறுமதி வாய்ந்த உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை விற்பனை செய்தமையின் மூலம் கிடைத்த பணத்தை சரியாக முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் 57 டீ 1 பந்திக்கு இணங்க மீளாய்வாண்டுக்காக ஊழியர் பணிக்கொடைகளுக்கு உரியதாக ரூபா 53,226,343 தொகையான ஊழியர் வாழ்நாள் நலன் இலாபமானது ஏனைய விரிவான வருமானங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. ஊழியர் நலன்களை வாழ்நாள் நலனின் பிரகாரம் ஆண்டின் வட்டிக் கிரயமான ரூபா 18,590,736 தொகை மற்றும் தற்போதைய சேவை கிரயமான ரூபா 10,500,848 தொகை ஆகியவற்றின் கூட்டு மொத்தமான ரூபா 29,091,584 தொகையான இலாபத்தினை கணிப்பிடும்போது சீராக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது இலாபத்திற்கான சீராக்கமாக ஊழியர் நலன்களாக ரூபா 14,785,105 ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கு உரிய செலவினம் ரூபா 14,306,479 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டு இலாபமானது அந்த அளவினால் மிகை கணிப்பீட்டிற்கு உள்ளாகி இருந்தது. | 2022 ஆம் ஆண்டு 2021 ஆம் ஆண்டுக்குரிய ஒப்பீட்டு ரீதியான தகவல்களை சமர்ப்பிக்கும் போது திருத்தப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வாழ்நாள் நலன் அறிக்கையின் பிரகாரம் வருமானக்கூற்றில் இனங்காணப்பட வேண்டிய மீதி ரூபா 24,134,759 ஆக காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த மீதியின் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது நிர்வாக செலவினம் மற்றும் விற்பனை கிரயங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனால் பணிக்கொடை ஒதுக்கங்களுக்கு உரிய தற்போதைய பெறுமதியாக ரூபா 178,749,675 ஆக சரியாக 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக கம்பனியின் நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஊழியர் நலன்கள் வாழ்நாள் இலாபமானது ஏனைய விரிவான வருமானத்தின் கீழும் ஆண்டுக்கான செலவினங்கள் வருமான கூற்றிலும் சரியாக சீராக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 41 இன் 44 ஆம் பந்திக்கு முரணாக கம்னெியின் மரங்களாக விற்பனை செய்யப்படும் நுகர்வு உயிரியல் சொத்துக்கள் ரூபா 14,520,840 தொகை முதிர்வடைந்த உயிரியல் சொத்துக்களுக்கு ஆரம்ப மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், நடப்பாண்டில் முதிர்வடையாத உயிரியல் சொத்துக்களுக்கு மேற்கொள்ளப்படும் சேர்த்தல்களில் ரூபா 12,072,025 தொகையான மரங்களின் பயிர்ச்செய்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் உயிரியல் சொத்துக்களின் ரூபா 26,592,865 தொகை மிகை கணிப்பீட்டுக்கு உள்ளாகி நுகர்வு உயிரியல் சொத்துக்களும் அந்த அளவினால் குறை கணிப்பீட்டிற்கு உள்ளாகி இருந்தது. | இதனை சமர்ப்பிப்பதில் காணப்பட்ட வழுவானது 2022 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நுகர்வு மற்றும் உயிரியல் சொத்துக்களின் சரியான வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை கணக்கிட்டு நியம இலக்கம் 41 இன் 45 ஆம் பந்திக்கு இணங்க நிதி கூற்றுகளில் ரூபா 689,011,347 தொகையான நுகர்வு உயிரியல் சொத்துக்களின் முதிர்வடைந்த மற்றும் முதிர்வடையாதது என வகைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நுகர்வு உயிரியல் சொத்துக்களின் முதிர்வடைந்த மற்றும் முதிர்வடையாதது என வகைப்படுத்தப்பட்டு நுகர்வு உயிரியல் சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 41 க்கு இணங்க சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நுகர்வு உயிரியல் சொத்துக்கள் முதிர்வடைந்த மற்றும் முதிர்வடையாதது என வகைப்படுத்தப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 300,802,698 தொகையான முதிர்ச்சி அடையாத உயிரியல் சொத்துக்களின் மீதி காணப்பட்டதுடன், முதிர்ச்சி அடையாத பயிர்கள் முதிர்ச்சி அடைவதற்கு எடுக்கும் காலம் தொடர்பில் கணக்கிட்டு கொள்கை ஒன்று பின்பற்றப்படாத காரணத்தால் 1993 ஆம் ஆண்டு முதல் கம்பனி நிறுவும் போது இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தில் இருந்து சுவீகரிக்கப்பட்ட 25 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 87,740,383 தொகையும் அந்த முதிர்வடையாத உயிரியல் சொத்துக்களின் பெறுமதியில் உள்ளடங்கி இருந்தது. | இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தினால் ஒப்படைக்கப்பட்டிருந்த முதிர்வடையாத பயிர்கள் தொடர்பில் தெளிவான தகவல் கம்பனி நிறுவப்பட்ட சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்டிராத காரணத்தால் அந்த பெறுமதிகளை இவ்வாறு முதிர்வடையாத பயிர்களின் கீழ் உள்ள கணக்கில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அறிவுரையின் அடிப்படையில் இந்த தகவல்கள் பொது திறைசேரியின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டு எதிர்காலத்தில் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முதிர்வடையாத பயிர்களில் இருந்து முதிர்வடைந்த பயிர்கள் வரை உயிரியல் சொத்துக்களினை மாற்றுதல் தொடர்பிலான கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தி உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் தோட்டங்களில் ரூபா 268,096 தொகையான உபகரண பெறுமானத் தேய்வானது நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிராத காரணத்தால் ஆண்டிற்கான இலாபமானது அந்த அளவினால் மிகைக் கணிப்பீட்டுக்கு உள்ளாகி இருந்தது. | 2022 ஆம் ஆண்டில் நிதி நிலைமை கூற்றில் 2021 ஆம் ஆண்டுக்கு உரிய ஒப்பிட்டு ரீதியான தகவல்களை சமர்ப்பிக்கும் போது சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களின் பெறுமானத் தேய்வானது சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அரச மரக் கூட்டுத்தாபனத்தின் விலைகளின் பிரகாரம் நடப்பாண்டில் கம்பனியின் நுகர்வு உயிரியல் சொத்துக்களின் பெறுமதி ரூபா 640,561,139 ஆக காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 689,011,347 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தமையால் நுகர்வு உயிரியல் சொத்துக்களின் பெறுமதியானது ரூபா 48,450,208 இனால் மிகை கணிப்பீட்டிற்கு உள்ளாகி இருந்தது. | அரச மரக் கூட்டுத்தாபனத்தின் விலைகளின் பிரகாரம் ரூபா 640,561,139 தொகையான நுகர்வு உயிரியல் சொத்துக்களின் பெறுமதியானது தவறுதலாக ரூபா 689,011,347 ஆக பதிவு செய்யப்பட்டமையால் வேறுபாடானது 2022 ஆம் ஆண்டின் நிதி நிலைமை கூற்றில் 2021 ஆம் ஆண்டுக்கு உரிய ஒப்பீட்டு தகவல்களை சமர்ப்பிக்கும் போது திருத்தப்பட்டு காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களின் நுகர்வு உயிரியல் சொத்துக்கள் சரியாக சீராக்கப்பட வேண்டும். |
| (இ) | நுகர்வு உயிரியல் சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பிடும் போது ஆரம்ப மீதி ரூபா 48,450,208 இனால் குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்த காரணத்தால் நுகர்வு உயிரியல் சொத்துக்களின் பெறுமதியிடல் இலாபம் அந்த அளவினால் மிகை கணிப்பீட்டிற்கு உள்ளாகி இருந்தது | அரச மர கூட்டுத்தாபனத்தின் விலைகளின் பிரகாரம், ரூபா 640,561,139 தொகையான உயிரியல் சொத்துக்கள் தவறுதலாக ரூபா 689,011,347 ஆக பதிவு செய்யப்பட்ட காரணத்தால் வேறுபாடானது 2022 ஆம் ஆண்டின் நிதி நிலைமை கூற்றில் 2021 ஆம் ஆண்டுக்கு உரிய ஒப்பீட்டு தகவல்களை சமர்ப்பிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நுகர்வு உயிரியல் சொத்துக்கள் சரியாக சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | நடப்பாண்டியன் போது மில்லவான மற்றும் அப்புகஸ்பிட்டிய தோட்டங்களின் ரூபா 22,224,393 பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 5364 இறப்பர் மரங்கள் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றின் கிரயம் உயிரியல் சொத்துக்களின் முன் கொண்டு | இலங்கை அரச பெரும் தோட்ட கூட்டு தாபனத்தில் இருந்து 1993 ஆம் ஆண்டின் எல்கடுவ பெருந்தோட்ட கம்பனிக்கு சுவீகரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பழைய விதை இறப்பர் மரங்களின் கிரயம் தொடர்பிலான தகவல்களை | உயிரியல் சொத்துக்கள் விற்பனை செய்யும் போது அதன் கிரயமானது சொத்துக்களின் பெறுமதியிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | செல்லப்படும் பெறுமதியிலிருந்து குறைத்து காண்பிக்கப்பட்டிறாத காரணத்தால் உயிரியல் சொத்துக்களின் மீதியானது மிகை கணிப்பீட்டிற்கு உள்ளாகி இருந்தது. | இனங்காண முடியாது இருந்தது. வெட்டி அகற்றப்பட்ட 5364 இறப்பர் மரங்களுக்கு உரிய கிரயமானது உயிரியல் சொத்துக்களில் இருந்து தனியாக இனம் காணுவதற்கும் அந்த சொத்துக்களின் பெறுமதியிலிருந்து குறைத்துக் காண்பிப்பதற்கும் முடியாது இருந்தது. | கழிக்கப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (உ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டியின் பெறுமதி ரூபா 7,437,950 ஆக காணப்பட்ட போதிலும் கணக்காய்வின் கணிப்பீடுகளின் பிரகாரம் அது ரூபா 3,532,861 ஆக காணப்பட்டமையால் ரூபா 3,905,089 இனால் பெற வேண்டிய மீதியானது மிகை கணிப்பீட்டிற்கு உள்ளாகி இருந்தது. | உரிய திருத்தங்கள் 2022 ஆம் ஆண்டில் கணக்குகளின் மூலம் மேற்கொள்ளப்படும். | நிதி ஆண்டுக்கு உரிய பெற வேண்டிய வட்டி வருமானம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கம்பனியின் தலைமை அலுவலகம் மற்றும் தோட்டங்களுக்கு இடையே காசு/பண்டங்கள் பரிமாற்றுவதற்கு பேணி செல்லப்படும் நடைமுறை கணக்கில் ஒன்றுக்கு ஒன்று ஈடு செய்யப்படாத ரூபா 25,397,432 தொகையான மீதிகள் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கலாக நடைமுறை பொறுப்புகளில் இருந்து கழிக்கப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் நடைமுறை பொறுப்புக்கள் அந்த அளவினால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2012 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நடைமுறை கணக்கினுள் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்படாத மீதிகளை இயலுமான அளவில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தலைமை அலுவலகம் மற்றும் தோட்டங்களுக்கு இடையே பேணி செல்லப்படும் நடைமுறை கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களின் அத்தியாவசியமான சீராக்கங்களை மேற்கொண்டதன் பின்னர் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக கம்பனியின் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதியினுள் 03 வருடங்களை மிஞ்சிய தலைமை அலுவலகத்தின் ரூபா 15,270,235 தொகையான கடன் பட்டோர் மீதியை அறவீடு செய்தல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்ட போதிலும் அந்த கடன் பட்டோர் மீதிகளுக்கான காண ஒதுக்கங்களை மேற்கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தின் 03 வருடங்களை மிஞ்சிய கடன் பட்டோர் மீதிகள் தொடர்பில் கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | நிச்சயமற்ற கடன் பட்டோர் மீதிகள் தொடர்பில் ஒதுக்கங்கள் மேற்கொள்ள வேண்டியதுடன் பெறவேண்டிய மீதியினை அறவிடுவதற்கு தாமதிக்காது நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | முதலீட்டு சொத்துக்களுக்காக 10 சதவீத வரிப் பொறுப்பொன்று இனம் காணப்பட வேண்டிய போதிலும், 14 சதவீதமான கணிப்பிடப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 97,313 ஆனால் அதிகரித்து மற்றும் குத்தகை வருமானத்திற்கான ரூபா 501,071 தொகை குத்தகை பொறுப்புக்கள் இனம் காணப்பட்டிராத காரணத்தால் செலுத்த வேண்டிய குத்தகை பொறுப்பானது ரூபா 403,758 இனால் குறை கணிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. | கம்பனியினால் மீளாய்வாண்டின் போது குத்தகை கணிப்பீட்டின் போது கட்டிடங்கள் மற்றும் காணிகளை குத்தகைக்கு வழங்கியமை மூலம், குத்தகை மற்றும் வாடகை வருமானங்கள் கம்பனியின் வியாபார நடவடிக்கைகளில் இருந்து உருவாகிய வருமானம் ஒன்றாக கருதப்பட்டு கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | உள்நாட்டு வருமான வரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் முதலீட்டு வட்டி மற்றும் குத்தகை வருமானத்திற்காக வரி கணிப்பிடப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | நிலையான வைப்பு மீதி | 83,388,676 | 86,730,394 | 3,341,717 | நிலையான வைப்புக்களில் முதலீட்டு சொத்துக்களை கணக்கு வைப்பதன் மூலம் இனம் காணப்படுவது கணக்கு ஆண்டின் இறுதியிலே என்பதுடன், அந்த நிலையான வைப்புகள் முதிர்வடையும் திகதியில் காணப்படும் மீதி | நிலையான வாய்ப்புக்களின் பெறுமதியானது சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | நாளதுவரையாக்கப்படும். நிலையான வாய்ப்புகளை புதுப்பிக்கும் போது அறிவித்தலானது அவை முதிர்வடையும் திகதியிலேயே வழங்கப்படுகின்ற போதிலும் ஆண்டின் இறுதியில் காணப்பட வேண்டிய பெறுமதியினுள் காண்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | செலுத்த வேண்டிய வட்டி - சிலாபம் பெருந்தோட்ட கம்பனி | 17,286,097 | 17,919,452 | 633,355 | கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட வேறுபாடு தொடர்பில் சரியாக ஆராய்ந்து உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். | செலுத்த வேண்டிய வட்டி சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பதவியணியின் கடன் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபா 1,456,203 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் இரண்டு வருடங்களுக்கு முன்னர் சேவையிலிருந்து விலகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 548,746 மீதி ஒன்றும் காணப்பட்டது. | ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக சேவையை விட்டுச் சென்ற/விலகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியணி கடன் இந்த மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வறான போதிலும் அவர்களுக்கு செலுத்த வேண்டிய பணிக்கொடை கொடுப்பனவுகள் இதுவரையிலும் விடுவிக்கப்பட்டிராததுடன், அவர்களால் செலுத்த வேண்டிய பதவியணி கடன் தொகையை குறித்த பணிக்கொடை கொடுப்பனவுத் தொகையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியில் சேவையிலிருந்து விலகிச் செல்வதற்கு முன்னர் அறவிட வேண்டியதுடன் தீர்க்கப்படாத கடன் மீதிகளை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டிய வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக கம்பனியின் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளினுள் 03 வருடங்களை மிஞ்சிய தலைமை அலுவலகத்தின் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளும் ரூபா 36,367,067 தொகை மற்றும் 01 முதல் 03 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 15,348,087 மீதியும் காணப்பட்ட போதிலும் அந்த மீதிகள் இதுவரையிலும் தீர்ப்பதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தில் 3 வருடங்களை விஞ்சிய கடன் கொடுத்தோர் மீதிகள் தொடர்பில் கணக்காய்வு அவதானிப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | நீண்டகால கடன் மீதிகளை தீர்ப்பதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக மற்றும் கடனுக்காக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 59,419,546 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள், ரூபா 55,359,546 தொகை அதாவது 93 சதவீதம் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமான செலுத்த வேண்டிய மீதிகளாக காணப்பட்ட போதிலும் இந்த மீதிகளை தீர்ப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கம்பனியின் தற்போதைய நிதி இடர்பாடு காரணமாக தலைமை அலுவலகத்தை போன்றே தோட்டத்தினாலும் செலுத்த வேண்டிய பொறுப்புகளை தீர்ப்பதற்கு உள்ள இயலுமை தற்போது காணப்படவில்லை என்பதுடன், நியதிச்சட்ட பொறுப்பன்றினை தீர்ப்பதற்காக மாத்திரம் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் மேலதிக நிதிப்பெறுவுகளின் அடிப்படையில் ஏனைய பொறுப்புக்களும் அவ்வப்போது செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய நீண்ட கால கடன் மற்றும் கடன் பத்திர வட்டிகளை தீர்ப்பதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு மற்றும் ஜனதா தோட்ட அபிவிருத்தி சபைக்கு செலுத்த வேண்டிய முறையே ரூபா 1,768,749 மற்றும் ரூபா 1,185,670 தொகை 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்ப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கம்பனியின் தற்போதைய நிதி இடர்பாடு காரணமாக தலைமை அலுவலகத்தை போன்றே தோட்டத்தினாலும் செலுத்த வேண்டிய பொறுப்புகளை தீர்ப்பதற்கு உள்ள இயலுமை தற்போது காணப்படவில்லை என்பதுடன், நியதிச்சட்ட பொறுப்பன்றினை தீர்ப்பதற்காக மாத்திரம் முன்னுரிமை | நீண்ட கால கடன் மீதிகளை தீர்ப்பதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் மேலதிக நிதிப்பெறுவுகளின் அடிப்படையில் ஏனைய பொறுப்புக்களும் அவ்வப்போது செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | கம்பனியால் சிலாபம் பெருந்தோட்ட கம்பனியிலிருந்து 2010 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட 03 வருடங்களில் தீர்ப்பதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட ரூபா 20,000,000 தொகையான கடன் மற்றும் அதற்கு 8 சதவீத வருடாந்த வட்டியான ரூபா 17,919,452 தொகையும் உள்ளடங்களாக ரூபா 37,919,452 தொகை 10 வருங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையான கொடுப்பனவுகளை முறையாக செலுத்துதல் கம்பனியினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் செலுத்த வேண்டிய சட்டக் கொடுப்பினைகளுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமையால் சிலாபம் தோட்ட கம்பெனிக்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் எதிர்காலத்தில் உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி பகுதி அடிப்படையில் செலுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | நீண்டகால கடன் மீதிகளை தீர்ப்பதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டத்தின் II ஆம் பகுதியின் 16(1) ஆம் பிரிவு, 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் | தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் தவணைப் பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் மிகை கட்டண தொகையுடன் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 28,948,985 தொகையும், ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 276,416,074 தொகையும் தோட்ட ஊழியர்களின் | கம்பனியின் ஆரம்பம் தொடக்கம் நிலவும் நிதி பற்றாக்குறை காரணமாக ஊழியர்களின் சட்ட ரீதியான கொடுப்பனவுகளை உரிய முறையில் கிரமமாக தீர்ப்பதற்கு கம்பனி தவறியுள்ளது. வரிசை அமைச்சின் தலையீட்டுடன் மற்றும் பொது திறைசேரியின் நிதி ரீதியான பங்களிப்புடன் நிலுவையாக காணப்படும் நியதிச் சட்ட கொடுப்பினை | நியதிச்சட்ட பொறுப்புக்களை உரிய பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சேமலாப நிதிய சட்டத்தின் 15 மற்றும் 16 ஆம் பிரிவுகள் | சேமலாப நிதியத்திற்கு (ESPS) ரூபா 9,603,595 தொகையும், இலங்கை தோட்டக்காரர்களின் சேமலாப நிதியத்திற்கு (CPPS) ரூபா 17,343,877 தொகையும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. | தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்ட போதிலும் இந்த நிலுவை பணத்தை முழுமையாக செலுத்தி தீர்ப்பதற்கு முடியாது உள்ளது. 2022 ஆம் ஆண்டு முதல் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரிய கொடுப்பனவுகளை உரிய முறையில் மேற்கொண்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டு முதல் ஊழியர் சேமலாப நிதியம், தோட்ட ஊழியர் நலன்புரி நிதி மற்றும் பணிக்கொடை கொடுப்பனவுகள் ஆகிய நீதி சட்ட கொடுப்பனவுகளும் தொடர்ச்சியாக செலுத்தப்படும். | |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் அதிகாரச்சட்டத் தின் 02 ஆம் பிரிவின் 5(1) ஆம் பிரிவு | ஊழியர் ஒருவர் ஓய்வு பெற்று சென்றுள்ள அல்லது மரணமடைந்து 30 நாட்களினுள் ஊழியருக்கு உரிய பணிக்கொடை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அதற்கமைய உரிய திகதியில் பணிக்கொடை செலுத்தப்படாத காரணத்தால் 1996 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய பணிக்கொடைகளின் பெறுமதி 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக ரூபா 171,873,551 ஆகும். 2021 ஆம் ஆண்டின் இறுதி அளவில் ரூபா 51,562,065 தொகையான மிகை கட்டணங்களும் செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. | கம்பனியின் ஆரம்பம் தொடக்கம் நிலவும் நிதி பற்றாக்குறை காரணமாக ஊழியர்களின் சட்ட ரீதியான கொடுப்பனவுகளை உரிய முறையில் கிரமமாக தீர்ப்பதற்கு கம்பனி தவறியுள்ளது. வரிசை அமைச்சின் தலையீட்டுடன் மற்றும் பொது திறைசேரியின் நிதி ரீதியான பங்களிப்புடன் நிலுவையாக காணப்படும் நியதிச் சட்ட கொடுப்பினை தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்ட போதிலும் இந்த நிலுவை பணத்தை முழுமையாக செலுத்தி தீர்ப்பதற்கு முடியாது உள்ளது. 2022 ஆம் ஆண்டு முதல் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரிய கொடுப்பனவுகளை உரிய முறையில் மேற்கொண்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டு முதல் ஊழியர் சேமலாப நிதியம், தோட்ட ஊழியர் நலன்புரி நிதி மற்றும் பணிக்கொடை கொடுப்பனவுகள் ஆகிய நீதி சட்ட கொடுப்பனவுகளும் தொடர்ச்சியாக செலுத்தப்படும். | நியதிச்சட்ட பொறுப்புக்களை உரிய பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் |

## 1.8 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட வரி அறிக்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கையளிக்கப்படடிருந்த போதிலும், 2021 மதிப்பீட்டு ஆண்டிற்குரிய 2021/2022 என்ற வருமான வரி அறிக்கை 2024 யூலை 31 ஆந் திதகி வரையிலும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டு முதல் வருடாந்த வரி அறிக்கை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு உரிய காலத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்து உள்ளோம். 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரிய வருடாந்த வரி அறிக்கைகளை இயலுமான அளவில் விரைவாக வருமான வரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும். | வருமான வரி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வரி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 323,026,549 இலாபமாக இருந்ததுடன் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 36,165,996 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 286,860,553 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக இறப்பர் மற்றும் தேங்காய் விற்பனை வருமானம் ஆனது முறையே ரூபா 23,894,994 இனால் மற்றும் ரூபா 13,113,897 இனால் அதிகரித்தமை கம்பனியின் நுகர்வு உயிரியல் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டமையின் மூலம் கிடைத்த வருமானம் ரூபா 318,364,428 இனால் அதிகரித்தமையும் இந்த அதிகரிப்புக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்கள் கடந்த வருடத்துக்குரிய அதிகரிப்புகள் மற்றும் குறைவுகளுக்குரிய அவதானிப்புகள் பின்வருமாறு.

| **வருமானம்** | **2021** | **2020** | **விலகல்** | **விலகல் சதவீதம் (%)** |
| --- | --- | --- | --- | --- |
| தேயிலை | 213,410,011 | 220,469,024 | (7,059,013) | 3 |
| இறப்பர் | 54,670,608 | 30,775,614 | 23,894,994 | 78 |
| தேங்காய் | 52,680,329 | 39,566,432 | 13,113,897 | 33 |
| **செலவினம்** | | | | |
| நிர்வாகச் செலவினம் | 53,418,386 | 53,819,175 | 400,789 | 1 |
| ஏனைய செலவினம் | 333,670 | 1,418,025 | 1,084,355 | 76 |
| நிதிச் செலவினம் | 11,503,017 | 15,945,131 | 4,442,114 | 28 |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) மீளாவாண்டின் மற்றும் கடந்த ஆண்டின் நடைமுறை சொத்துக்கள் விகிதம் முறையே 0.3 : 1 மற்றும் 0.24 : 1 ஆக காணப்பட்டதுடன் துரித சொத்துக்கள் விகிதம் முறையே 0.29 : 1 மற்றும் 0.23 : 1 ஆக காணப்பட்டது. கடந்த வருடங்களின் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதிகள் முறையே ரூபா 469,754,239 மற்றும் ரூபா 389,951,200 ஆக காணப்பட்டதுடன் நடைமுறை பொறுப்புகளின் பெறுமதியானது அதிகரித்திருந்தமை நடைமுறை சொத்துக்கள் மற்றும் துரித சொத்துக்கள் விகிதத்தின் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது

(ஆ) 2020 ஆம் ஆண்டின் மொத்த இலாபம் ரூபா 5,500,955 ஆக காணப்பட்டதுடன், இதற்கு நேர் ஒத்த மீளாய்வாண்டின் மொத்த நட்டம் ரூபா 37,767,383 ஆக காணப்பட்டிருந்த போதிலும் நுகர்வு உயிரியல் சொத்துக்களின் பெருமதியிடல் இலாபம் 530 சதவீதத்தினால் அதிகரித்தமையும் 2020 ஆம் ஆண்டில் நிலவிய 12 சதவீத தேறிய இலாப விகிதம் மீளாய்வாண்டில் 98 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட தேயிலை விளைச்சலை விடவும் உள்ளபடியான தேயிலை விளைச்சல் 53 சதவீதம் குறைவடைந்து இருந்ததுடன் ஒவ்வொரு தோட்டத்திலும் தேயிலை விளைச்சல் 39 சதவீதத்திலிருந்து 65 சதவீதம் வரையான வீச்சில் வீழ்ச்சி அடைந்திருந்தது. | 2021 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட தேயிலை விளைச்சலினை பெற்றுக்கொள்ள முடியாது இருந்தமைக்கு சந்தையில் நிலவிய பாரிய இரசாயன உர பற்றாக்குறை இரசாயன கிருமி நாசினிகளை பயன்படுத்துதல் தடை செய்யப்பட்டவை மற்றும் அதிக மலை வீழ்ச்சி ஆகியவற்றின் காரணமாக களத்தில் களைகளை கட்டுப்படுத்தல் மிகவும் சிரமமானதாக காணப்பட்டமை, கம்பனிக்கு சொந்தமான காணப்படும் விளைச்சலில் குறைவான மிகவும் பழமையான தேயிலை பயிர்ச்செய்கையின் சதவீதம் 90 சதவீதத்தினை மிஞ்சியமை, கொவிட் தொற்று நோயின் மத்தியில் தொழில்பாடுகளை மேற்கொள்ளல் மட்டுப்படுத்தப்பட்டமையும், தேயிலை மரங்களின் தண்டுகளை அரிக்கும் சிறு பூச்சிகள் போன்ற விடயங்கள் தாக்கமளித்திருந்தன. | தேயிலை பயிர்ச்செய்கையை முறையாக நிர்வகித்து, தேயிலை விளைச்சலை அதிகரிக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் நிதி பீடத்தின் மூலம் 2021 ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி ஒன்றின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டேயரில் அங்கீகரிக்கப்பட்ட இறப்பர் பால் விளைச்சலானது | கம்பனியில் தற்போது காணப்படும் இறப்பர் பயிற்சிகையானது 73 சதவீத விளைச்சல் இல்லாத ஆயுட் காலம் 60 வருடங்களை விட பழைமையான இறப்ப பயிர்கள் காணப்பட்டதுடன், அதிக விளைச்சலுடனான ஒட்டு இரப்பர் பயிர்ச்செய்கையை 27 சதவீதத்தினை விட குறைவான பெறுமதியை கொண்டிருந்தது. | விளைச்சலை அதிகரிக்கும் புதிய இரப்பர் பயிர்ச்செய்கைக்காக மற்றும் ஒட்டு இறப்பர் பயிர்ச்செய்கை மூலம் இறப்பர் உற்பத்தியை அதிகரிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | 800 கிலோகிராம்கள் முதல் 1000 கிலோ கிராம்களுக்கு இடைப்பட்டதாக காணப்பட்டதுடன், கம்பனியில் அந்த பெறுமதி 326 கிலோகிராம்கள் முதல் 711 கிலோகிராம்கள் இடைப்பட்டதாக காணப்பட்டது. பயன்படு ஆயுட்காலத்தை மிஞ்சிய பயிர்கள் அகற்றப்பட்டு புதிய பயிர்கள் நடப்பட்டிருக்காமை இறப்பர் பால் விளைச்சல் வீழ்ச்சி அடைந்தமைக்கு காரணமாக அமைந்திருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நிலவிய அதிக மழை வீழ்ச்சி காரணமாக ஹபுகஸ்பிட்டியை தோட்டத்தில் 110 நாட்களும், இந்த தோட்டத்தில் 124 நாட்களும் மில்லவான தோட்டத்தில் 110 நாட்களும் எனுமாறு பால் வெட்டுவதற்கு முடியாது போன காரணத்தால் இறப்பு விளைச்சல் குறைவதற்கு தாக்கமளித்திருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | விழுந்த தேங்காய்களுக்கு தொழிற்சாலையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வீதமானது 5 சதவீதமாக காணப்பட்ட போதிலும் கம்பனியின் 2021 ஆம் ஆண்டின் உள்ளபடியான தேங்காய் விளைச்சல் ஆனது 1,060,867 ஆக காணப்பட்டதுடன் விழுந்த தேங்காய்களின் எண்ணிக்கை 316,618 ஆக காணப்பட்டமையால் அது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட 25 சதவீத உயர்வாக காணப்பட்டது. | மில்லாவன தோட்டத்தில் உள்ள தென்னை மரங்களில் எண்ணிக்கையானது 21,330 அதாவது 70% அளவானது உயரம் 40 அடியை விட அதிகமான மரங்களாக காணப்பட்டதுடன், அவற்றுள் பெரும்பாலானவை 60 அடிகளை விட உயரமானவை ஆகும். இந்தத் தோட்டத்தில் தேங்காய் பறித்தல் துரட்டிகளை பயன்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் கூடிய ஆகக்கூடிய உயரமானது 60 அடிக்குமட்டப்படுத்தப்பட்டிருந்ததுதற்போது களத்தில் மரம் ஏறுவதன் மூலம் தேங்காய் பறிப்பதில் உள்ள குறைவு மற்றும் அதிக உயரமான தேங்காய் மரங்களுக்கு ஏறுவதற்கு தயக்கம் காட்டப்படுகின்றமை ஆகிய காரணங்களால் தேங்காய்கள் விழும் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது. கொவிட் 19 தோற்று நோய் நிலைமையின் மத்தியில் நாடு அடிக்கடி மூடப்பட்டமையால் ஒப்பந்ததாரர்கள் தேங்காய் பறிப்பதற்கு வரவழைக்க முடியாது இருந்தமையால் விழும் தேங்காய்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. | தேங்காய் பறிக்கும் பணியை உரிய முறையில் முகாமை செய்வதன் மூலம் விழும் தேங்காய்களின் சதவீதத்தினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிர்வாக சபை அங்கீகரித்த வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2024 யூன் 14 ஆம் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், வரைபு ஆண்டறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர்களின் அவதானிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் முகம் கொடுப்பதற்கு நேர்ந்துள்ள தடுக்க முடியாத காரணங்களின் அடிப்படையில் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக இறுதி நிதிக்கூற்றுக்களை உரிய திகதிகளில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியாது உள்ளது. 2021 ஆம் ஆண்டில் கணக்காய்வு அறிக்கை கிடைத்ததும் உடனடியாக உடனடியாக தற்போது சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ள 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரிய வரைபு ஆண்டறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்து உள்ளோம். மேலும் 2024 ஆம் ஆண்டுக்கு உரிய பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த நிதிக்கூற்றுக்களை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கும் தற்போது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவாறு காணப்படுகின்றன. | வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன குறித்துரைத்த திகதியில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |